*12*

# இதைச் செய்யுங்கள் அப்போது நீங்கள் ஒருக்காலும் இடறிவிழ மாட்டீர்கள் (2 பேதுரு 1:3-21)

இன்றைய நாட்களில் நாம் எங்கு நோக்கினாலும், நமக்கு மிக வெண்மை யான பற்கள் அல்லது பெரிய பெரிய கார்கள் தேவை என்றும், மிகநேர்த்தி யான உடைகள் மற்றும் நவநாகரீகமான கருவிகள் தேவை என்றும் நம்மை வற்புறுத்தி இணங்கச் செய்ய முயற்சிக்கும் செய்திகளால் நாம் மோதப்படுவதாக காணப்படுகிறது. விளம்பரதாரர்கள் தங்கள் வாடிக்கையாளர்களின் வாழ்வில் தேவைகளை உய்த்துணரச் செய்தல் மாத்திரமே, தங்கள் உற்பத்திப் பொருட்கள் விற்கக் காரணமாக முடியும் என்று அறிந்துள்ளனர்.

அவ்வாறே கள்ளப் போதகர்களும், கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய சில ஆசீர்வாதங்களில் குறைவு பட்டுள்ளனர் என்று முதலில் அவர்களை நம்பி இணங்கச் செய்வதன் மூலம், கிறிஸ்தவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துகின்றனர். பேதுரு தமது இரண்டாம் நிருபத்தை எழுதியபோது, புதிய வெளிப்பாடுகளைக் கொண்டிருந்ததாகப் பல போதகர்கள் உரிமைகோரிக் கொண்டிருந்தனர்.

## திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகுதல் *(1:3-7)*

பேதுரு, தமது வாசகர்கள், தங்களுக்கு அவசியமான யாவற்றையும் "தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே" பெற்றிருந்தனர் என்று அவர்களுக்கு உறுதிப்படுத்தினார் *(1:3)*. பேதுரு மற்றும் அவரைப் போன்றவர்களின் செய்தியினால், ஆசியா மைனர் பகுதியில் இருந்த கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் முழு ஆசீர்வாதங்களுக்கு சுதந்தரர்கள் ஆகியிருந்தனர்.

பேதுரு குறிப்பிட்ட கிறிஸ்தவர்கள், தங்கள் தோற்றகாலப் போதகர்களின் செய்தியைக் கேள்விப்பட்டு அதற்குக் கீழ்ப்படிந்ததன்மூலம், தேவனுடன் ஒன்றாயிருப்பதற்கு ஆவிக்குரிய வாழ்வில் மறுபடியும் பிறந்திருந்தனர். அவர்கள் பெற்றுக்கொண்டிருந்த வசனமானது, அவர்கள் பாவத்தை எதிர்த்து நிற்பதற்கும் மீட்கப்பட்ட பரிசுத்த மக்களாக வாழ்வதற்கும் தேவையான ஆதாரவளங்களை அவர்களுக்குக் கொடுத்திருந்தது. மற்ற போதகர்கள், தேவனைச் சென்று சேரக் கூடுதலான வழிகளை அளித்தார்களா அல்லது ஒழுக்கரீதியான சில புதிய தர அளவைகளைக் காண்பித்தார்களா? பேதுரு தமது வாசகர்களுக்கு, அவர்கள் தம்மிடத்தில் இருந்து பெற்றுக்கொண்ட செய்தி தேவனுடைய முழுமை யான வெளிப்பாடாக இருந்தது என்று உறுதியளித்தார். அவர்கள் எதிலும் குறைவுபடவில்லை.

பேதுருவின் வாசகர்கள் - "இயேசுவை எழுப்பினதினாலே தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தத்தை அவர்களுடைய பிள்ளைகளாகிய நமக்கு நிறைவேற்றினார்" என்ற பவுலின் வார்த்தைகளின்படி (நடபடிகள் 13:33) - வாக்குத்தத்தங்களைப் பெற்றிருந்தனர் மற்றும் வாக்குத்தத்தங்களுக்குச் சுதந்தரர்களாக இருந்தனர். தற்போதய போதகர்கள் வருவதற்கு முன்னர், பேதுருவின் உரையைக் கேட்டவர்கள், கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாகப் பாவமன்னிப்பை அனுபவித்திருந்தனர். அவர்கள் கர்த்தரின் மகாப்பெரிய நாளில் தாங்கள் இரட்சிக்கப்படுவோம் என்ற விலையேறப்பெற்ற வாக்குத்தத்தத்தைப் பெற்றிருந்தனர். பேதுருவின் வாசகர்கள் ஏற்கனவே மகிழ்வுடன் அனுபவித்துள்ள வாக்குத்தத்தங்களின் மாபெரும் தன்மைக்கு, கள்ளபோதகர்களினால் ஏற்படுத்தப்பட்ட எந்த வாக்குத்தத்தங்களும் இணையாக முடியாது.

கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய வகையில் தேவனுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளனர். பவுல், "மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்" என்று கூறினார் (ரோமர் 6:4). திவ்விய சுபாவத்தில் பங்கேற்றலைத் தேவனுடைய கிருபை அனுமதிக்கிறது; கிறிஸ்தவரின் பாவத்தைக் கிறிஸ்து மன்னித்து இருப்பதால், கிறிஸ்தவர் தூய்மையும் பரிசுத்தமும் உள்ளவராகிறார். இவ்வாறாக அவர், இச்சையினால் உலகத்தில் உண்டாகும் கேட்டிற்குத் தப்புகிறார். கிறிஸ்தவர்கள் திவ்விய சுபாவத்தில் பங்கேற்றுள்ளதற்கு ஒப்பாக எதையாவது, தாமதமாகக் காட்சிக்குள் வந்தவர்கள் அளிக்க முடிந்ததா? ஒரு போதகர் புதிய சுவிசேஷச் செய்தியொன்றைக் கொண்டுள்ளதாகவோ, கர்த்தரின் இரண்டாம் வருகை பற்றிய புதிய வெளிப்படுத்துதல் ஒன்றைக் கொண்டுள்ளதாகவோ, அல்லது மனிதர்கள் இதற்குமுன் ஒருக்காலும் கேள்விப்பட்டிராத வேத வசனவிளக்கம் ஒன்றைக் கொண்டிருப்பதாகவோ, உரிமைகோருவதை கிறிஸ்தவர் ஒருவர் கேள்விப்படும்போதெல்லாம் அவர் பகுத்தறிதலைப் பயன்படுத்த வேண்டும். அவர் சற்றே நிதானித்து, "நான் ஆரம்பம் முதலாகக் கேள்விப்பட்டுள்ள சுவிசேஷ செய்தி, குறைவுடையதென்று நிரூபிக்கப்பட்டுள்ளதா? அது போதுமானவற்றை வாக்குத்தத்தம் பண்ணவில்லையா?" என்று கேட்டுக்கொள்ள வேண்டும். அடுத்த வசனங்களில் பேதுரு, கிறிஸ்தவர்கள் தேவபக்தியுள்ள பண்பைத் தங்களுக்கு வளமாக அளித்துக்கொள்ளும்போது, அவர்கள் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் யாவற்றிற்கும் சுதந்தரர்கள் ஆகின்றனர் என்பதைத் தெளிவாக்கினார். 1:5-7ல், தேவபக்தியுள்ள பண்பிற்கான பாதை விவரிக்கப்பட்டுள்ளது, இது இந்த நிருபத்தில் மிகச்சிறப்பாக அறியப்பட்டுள்ள மற்றும் பெரும்பாலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வசனப்பகுதியாக உள்ளது.

விசுவாசம் என்பது கிறிஸ்தவப் பயணத்தின் தொடக்க முனையாக உள்ளது, ஆனால் யாக்கோபுவின் வார்த்தைகளில், "... கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது" என்று காணப்படுகிறது (யாக்கோபு 2:26). ஆகவே பேதுரு, "இப்படியிருக்க, ... உங்கள் விசுவாசத்தோடே ஒழுக்க மேன்மையை [நற்தன்மையை, NIV] ... கூட்டி வழங்குங்கள்" என்று கூறினார்

(1:5). கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்துடன், ஒழுக்க நேர்த்தன்மை மற்றும் சுய ஒழுங்கமைவு ஆகியவற்றை ஏற்படுத்தும் பண்புகளைக் கூட்ட வேண்டியவர்களாக உள்ளனர். ஒழுக்க மேன்மைக்கு நாம், "அறிவை" கூட்ட வேண்டியுள்ளது (1:5). இந்த சந்தர்ப்பப் பொருளில், அறிவு என்பது "தேவனுடைய ஞானமாக" உள்ளது, இதைப் பவுல் 1 கொரிந்தியர் 2:7ல் குறிப்பிட்டிருந்தார். இது தேவனுடைய சத்தியத்தைப் பற்றிய அறிவாகவும், தேவனுடைய மகிமைக்கு அந்த அறிவைப் பயன்படுத்துதலாகவும் உள்ளது. அறிவுடன் நாம், "இச்சையடக்கத்தை" கூட்ட வேண்டியுள்ளது (1:6), இது KJV வேதாகமத்தில் உள்ள "temperance" என்ற வார்த்தையைவிட சிறப்பானதாக உள்ளது. பவுல், ஆவியின் கனிகள் பற்றிய தமது பட்டியலில் இச்சையடக்கத்தை உள்ளடக்கினார் (கலாத்தியர் 5:23). சாலொமோனின் நீதிமொழிகளில் ஒன்று, "தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம்போலிருக்கிறான்" (நீதிமொழிகள் 25:28) என்று கூறுகிறது.

இச்சையடக்கத்துடன் நாம் "பொறுமையை" ["perseverance"] கூட்ட வேண்டியதாக உள்ளது (1:6). KJV வேதாகமத்தில், எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்ளுதல் என்ற கருத்தை அடிக்கடி தெரிவிப்பதாக உள்ள "patience" என்ற வார்த்தை உள்ளது. கிரேக்க வார்த்தையின் கருத்தானது, தடைகளை எதிர்கொள்ளுகையில் உறுதியாகச் சகித்திருத்தல் என்பதாக உள்ளது. பொறுமையுடன் "தேவபக்தியை" நாம் கூட்ட வேண்டியுள்ளது (1:6). தேவபக்தி என்பது, நமது வாழ்வு தேவனுடன் இசைவிணக்கமாக இருக்கும்போது, நாம் செய்கிற யாவும் அவரைப் பிரியப்படுத்துவதாகவும் அவரைக் கனப்படுத்துவதாகவும் இருக்கும்போது, நாம் செயல்படும் வகையாக உள்ளது.

தேவபக்தியுடன் நாம் "சகோதர சிநேகத்தை" கூட்ட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது (1:7). இதே கிரேக்க வார்த்தை 1 பேதுரு 1:22ல் பயன்படுத்தப்பட்டு இருக்கையில், இதைப்போன்ற ஒரு வார்த்தை 1 பேதுரு 3:8ல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொருள் சார் உலகத்தில் இது, மாம்சப்பிரகாரமாக சகோதரராக இருப்பவர் மீதான அன்பையே அடிக்கடி அர்த்தப்படுத்துகிறது. புதிய ஏற்பாட்டில் இது, கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்கள் மத்தியிலான அன்பை அர்த்தப்படுத்துகிறது.

சகோதர சிநேகத்துடன் நாம் "அன்பை" கூட்ட வேண்டும் என்று பேதுரு கூறினார் (1:7).பவுலைப் போன்று (1 கொரிந்தியர் 13:13), அவர் நெறிமுறைகளின் இளவரசனைக் கடைசி வரையிலும் கூறாமல் சேமித்து வைத்திருந்தார். இவ்வார்த்தையானது ஒரு வாக்கியத்தில் தொகுத்துரைக்கக் கூடாதபடிக்கு அவ்வளவு உயர்வான அளவீடுகள் உடையதாக உள்ளது.

## உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் (1:8-15)

பேதுரு தமது வாசகர்கள் கள்ளப்போதகர்களைச் செயல்திறனுடன் கையாளக் கூடியவர்களாக இருக்கும்படிக்கு அறிவில் அவர்கள் வளர உதவுவதற்காகத் தமது நோக்கத்தில் இருந்து புறம்பே அலைந்து விடாதிருந்தார். அவர், "இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால்,

உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது" என்று கூறினார் (1:8). ஒரு கிறிஸ்தவர், 1:5-7ல் பட்டியலிடப்பட்டுள்ள உயர்நெறிகளைத் தமது வாழ்விற்குத் தாராள மாக அளிக்கிறபோதும், அவற்றை அவர் நடைமுறைப் படுத்துகிறபோதும், கிறிஸ்துவைப் பற்றிய அறிவு என்பது இயல்பாகவே ஒரு உப உற்பத்திப் பொருளாகிறது. பேதுரு கோட்பாட்டளவில் அல்ல ஆனால் நடைமுறை அறிவைப் பற்றிப் பேசினார். இவை இரண்டும் ஒன்றல்ல. உதாரணமாக, உடற்பயிற்சியைப் பற்றி ஒருவர் வாசித்தல் என்பது ஒரு விஷயமாக இருக்கலாம், ஆனால் அவர் உடற்பயிற்சியைச் செயல்படுத்துவதற்கு, தமது வாழ்வில் அதிககாலத்தை முதலீடு செய்த பின்புதான் அவர் உடற்பயிற்சி என்றால் என்ன என்று *அறிகிறார்*.

ஆவிக்குரிய வட்டாரமும் இதைப்போன்றதாகவே உள்ளது. பொறுமையைப் பற்றி ஒருவர் வாசிக்கலாம், ஆனால் அவர் பொறுமையாக இருக்கும்போது மாத்திரமே பொறுமையைப் பற்றியும் அதில் தமது திறன் பற்றியும் *அறிகிறார்*. அதைப்போன்றே, அவர் இச்சையடக்கத்தைச் செயல்படுத்தும் போது மாத்திரமே இச்சையடக்கத்தைப் பற்றி அறிகிறார். பொறுமை, இச்சையடக்கம் மற்றும் பிற கிறிஸ்தவ கிருபைகளை அறிதல் என்பது கிறிஸ்துவை அறிதலாக உள்ளது. செய்தல் என்பது அறிதலை பிறப்பிக்கிறது. இவைகள் நமக்கு உண்டாகிப் பெருகியிருந்தால், நாம் நமது கர்த்தரைப் பற்றிய அறிவில் செயல்விளைவும் உற்பத்தித் திறனும் உள்ளவர்களாக இருப்போம் என்று அப்போஸ்தலர் உறுதி அளித்தார். ஒருவர் கிறிஸ்துவை அறிக்கையிட்டும், கிறிஸ்தவ போதனையின் இந்த நடைமுறை வெளிப்பாடுகளை அறியத் தவறுகிறவர் பார்வையற்றவராகவும் தாம் தமது கடந்த காலப் பாவங்களில் இருந்து சுத்திகரிக்கப்பட்டதை மறந்தவராகவும் (அதாவது, அதை அறியாதவராகவும்) இருக்கிறார் (1:9).

தேவன் தமது நாமத்தைத் தரித்துக்கொள்ளவும் தமக்குச் சொந்த மானவர்களாக இருக்கவும், மக்களை அழைத்து, தேர்வுசெய்து, தெரிந்துகொண்டிருக்கிறார். இது பழைய ஏற்பாட்டின் போதனைக் கருவில் ஆழமாக விரிந்துள்ள ஒரு கருத்தாக உள்ளது. நியாயப்பிரமாணத்தை மோசே, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களுக்குக் கொடுத்தபின்பு, பிறப்பின் நிமித்தமாகவே ஒரு நபர், தேர்ந்துகொள்ளப்பட்டவர்களின் மத்தியில் எண்ணப்பட்டார். கிறிஸ்து தமது புது உடன்படிக்கையை நிலைநாட்டி இருப்பதால், நாம் விசுவாசத்தினால், தேர்ந்துகொள்ளப்பட்டவர்களின் மத்தியில் எண்ணப்படுகிறோம். பேதுருவின் வாசகர்களினுடைய அறிவுக்குறைவானது அவர்கள் தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள் மத்தியில் இருக்கத் தவறுதலை விளைவிக்கும் என்பது பேதுருவின் கவலையாக இருந்தது (1:10). "நீங்கள் ஒருதரம் இரட்சிக்கப்பட்டுவிட்டால், ஒருக்காலும் இழந்துபோகப்பட முடியாது" என்று கூறுகிற போதனையானது வேதவசனங்களில் காணப்படுவதில்லை. நாம் நமது அழைப்பை உறுதிப்படுத்தும்போது, நாம் விசுவாசம்நிறைவுடன் வாழ்வோம், நாம் தேவனுடைய நித்திய இராஜ்யத்திற்குள் வளமான வரவேற்பைக் கொண்டிருப்போம் என்று பேதுரு கூறினார் (1:10, 11). பேதுரு, தாம் புதிதான ஏதொன்றையும் போதிக்கவில்லை என்பதைத் தெளிவாக்கினார். அவர்கள் எதை உண்மையென்று ஏற்கனவே அறிந்திருந்தனரோ, அதை அவர்களுக்கு நினைவூட்டுதலே அவரது ஒரே நோக்கமாக இருந்தது (1:12).

நாம் புதிதாகச் சில போதனையைக் கற்றுக்கொள்வதைக் காட்டிலும், நாம் ஏற்கனவே அறிந்துள்ளவற்றைப் பற்றி நினைவூட்டப்படுதல் அதிக அவசியமாக உள்ளது. நிலையற்ற மற்றும் பக்குவற்ற மக்கள் எப்போதுமே அதிகமாகச் சிலவற்றை, புதிதாகச் சிலவற்றை ஆராய்ந்து கொண்டுள்ளனர். வேதாகமம் நம்மைச் சத்தியத்தில் உறுதியாக நிலைநாட்டும் ஒவ்வொரு போதனையும் அதன் வெளிப்பாட்டுடன் ஜாக்கிரதையாக ஒப்பிடப்பட வேண்டும்.

1 பேதுரு நிருபத்தைப் போலின்றி, 2 பேதுரு நிருபம், சுவிசேஷத்தில் அடையாளம் காணப்படக் கூடியவையான, பேதுருவின் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பற்றிய மறைமுகமான குறிப்பிடுதல்கள் கொண்டதாக உள்ளது. 2 பேதுரு 1:14ல் அவர் தம்மிடத்தில் இயேசு பேசியிருந்த வார்த்தைகளைக் குறிப்பிட்டார்.

> "நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது உன்னை நீயே அரைகட்டிக்கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய்; நீ முதிர் வயதுள்ளவனாகும் போது உன் கைகளை நீட்டுவாய்; வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்." இன்னவிதமான மரணத்தினாலே அவன் தேவனை மகிமைப்படுத்தப்போகிறானென்பதைக் குறிக்கும்படியாக இப்படிச் சொன்னார் (யோவான் 21:18, 19).

கர்த்தருடைய தீர்க்கதரிசனம் நிறைவேறுதலுக்கான வேளை சமீபமாயிருந்தது என்று பேதுரு புரிந்துகொண்டிருந்தார் (1:14).

1:15ல் பேதுரு கடந்தகால நிகழ்வையல்ல ஆனால் எதிர்காலத்திற்கான தமது திட்டங்களைக் குறிப்பிட்டார். அவர், "மேலும், நான் சென்றுபோனபின்பு இவைகளை நீங்கள் எப்பொழுதும் நினைத்துக்கொள்ள ஏதுவுண்டாயிருக்கும்படி பிரயத்தனம்பண்ணுவேன்" என்று கூறினார். அவர், தமது மரணத்திற்குப் பின்பு, தமது வாசகர்கள், கிறிஸ்து தமக்கு அறியச் செய்த "விஷயங்களை" நினைவில் கொண்டிருக்க வேண்டும் என்று விரும்பினார். 1:15ம் வசனம், கிறிஸ்துவின் வாழ்வைப் பற்றிய ஒரு பதிவை அவர் பேதுரு தமது வாசகர்களுக்கு விட்டுச் செல்ல வேண்டும் என்ற அவரது விருப்ப நோக்கத்தைக் குறிக்க வாய்ப்புள்ளது. பேதுரு எழுதிய சுவிசேஷம் என்று ஒரு புத்தகம் நம்மிடத்தில் இல்லை, ஆனால் மாற்கு சுவிசேஷத்தின் பின்னணியில் பேதுருவின் அதிகாரத்துவம் இருந்தது என்பது பழங்கால சபையின் சாட்சியமாக உள்ளது. மாற்கு சுவிசேஷத்தில் நாம், பேதுரு வாக்களித்த முயற்சிகளின் விளைவைக் கொண்டிருக்கச் சாத்தியக்கூறு உள்ளது.

## கர்த்தருடைய வல்லமை மற்றும் வருகை பற்றிய உங்கள் அறிவில் நம்பிக்கையாயிருங்கள் (1:16-21)

16ம் வசனம், "நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக்கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம்" என்று கூறுகிறது. பேதுரு, தமது சொந்த போதனையின்

*பின் இருந்த அதிகாரத்துவம் மற்றும் கள்ளப்போதகர்களின் அதிகாரத்துவம் இல்லாமை ஆகியவற்றிற்கு இடையில் இருந்த வேறுபாட்டைத் தெளிவாக்கினார். அவர்களின் போதனையானது, "தந்திரமான கட்டுக்கதைகளின்" விளைவாக இருந்தது. அந்தக் கதைகளுக்குப் பதிலாக, அப்போஸ்தலர்களின் செய்தியைத் தேர்ந்து கொள்ள வேண்டியதற்கான இரண்டு முக்கியமான காரணங்களைப் பேதுரு, 1:1-21ல் அவர்களுக்குக் கொடுத்தார்.*

*முதலாவது, பேதுரு கண்ணால் கண்ட சாட்சியாக இருந்தார். 1 பேதுரு 5:1 மற்றும் 2 பேதுரு 1:16 ஆகிய இரு வசனங்களிலும், இந்த அப்போஸ்தலர் தமது அதிகாரத்திற்கு அடிப்படையாகத் தாம் கிறிஸ்துவைக் கண்ணால் கண்டிருந்ததை வேண்டுகோளாக விடுத்தார். 1 பேதுரு நிருபத்தில் அவர் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியைக் குறிப்பிடவில்லை, ஆனால் 2 பேதுரு நிருபத்தில் அவர் அதைச் செய்தார் (1:17, 18). அவர் தேர்ந்துகொண்ட நிகழ்ச்சியானது இந்தக் கிறிஸ்தவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் அவர் ஒத்திகை பார்த்திருந்ததாகும் என்பதில் சந்தேகம் இல்லை. பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோர், மறுரூபமலையில் மோசேயும் எலியாவும் தோன்றி கர்த்தருடன் உரையாடுகையில், அவருடன் இருந்திருந்தனர். அதிக நாடகத்துவமான சில விஷயங்கள்கூட நடைபெற்றிருந்தன. உன்னதமான மகிமையில் இருந்து பேசியவர், இயேசுவுக்குச் சாட்சி பகர்ந்தார்: "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்." மத்தேயு 17:1-5, மாற்கு 9:2-7 மற்றும் லூக்கா 9:28-35 ஆகிய வசனப்பகுதிகள் இந்த நிகழ்ச்சியைப் பதிவு செய்துள்ளன. இந்த மூன்று வசனப்பகுதிகளிலும், "இவருக்குச் செவிகொடுங்கள்" என்பது தேவனிடத்தில் இருந்து வந்த கூடுதல் அறிக்கையாக இருந்தது.*

*இரண்டாவது, பேதுருவின் செய்தியானது, தீர்க்கதரிசிகளின் சாட்சியத்தைக் கொண்டிருந்தது. கள்ளப்போதகர்கள், கண்ணால் கண்ட சாட்சியம் பற்றிய விபரங்களோ அல்லது தேவனுடைய தீர்க்கதரிசிகளின் ஆதரவோ கொண்டிருக்கவில்லை. தீர்க்கதரிசிகள் கூறியுள்ளவைகளுக்குக் கவனம் செலுத்தும்படி பேதுரு தமது வாசகர்களுக்குப் புத்தி கூறினார். 1:20ல்* KJV *வேதாகமத்தின் மொழிபெயர்ப்பு சற்றே குழப்பமூட்டுவதாக உள்ளது. அது, "வேதத்தில் உள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் தனிப்பட்ட விளக்கம் கொண்டதாயிராது" என்று கூறுகிறது. நாம் வேதவசனங்களைத் தனிப்பட்ட வகையில் விளக்கம் அளிக்கக் கூடாது என்று பேதுரு கூறவில்லை. தேவனுடைய வசனத்தை யாராவது ஒருவர் நமக்கு விளக்கி உரைக்காத வரையில், அது அர்த்தப்படுத்துவது என்ன என்று நாம் எவ்வாறு அறிய முடியும்? தீர்க்கதரிசனமானது தனிநபர் தமது சொந்த வகையில் செயல்படுதலின், தனிப்பட்ட ஊக்க விருப்பத்தின் விஷயம் அல்ல என்றே அவர் கூறினார். இவ்விடத்தில் தமிழ் வேதாகமம் "வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது" என்று ஓரளவு சரியான மொழிபெயர்ப்பைக் கொண்டுள்ளது. தேவனே தீர்க்கதரிசிகளை ஏவியிருந்தார். அதனால்தான் அவர்களது செய்திகள் அவ்வளவு கனமும் அதிகாரமும் கொண்டுள்ள.* NIV *வேதாகமத்தின் மொழிபெயர்ப்பு இந்தக் கருத்தை அதிகம் தெளிவாக விளக்குகிறது: "... வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் தீர்க்கதரிசியின் சொந்த விளக்கத்தினால் வரவில்லை."* NASB *வேதாகமம், "வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் ஒருவரது சொந்த*

*விளக்கமாக இருப்பதில்லை" என்று கூறுகிறது.*

## முடிவுரை

*1ம் அதிகாரத்தில் பேதுரு, அறிவை வலியுறுத்தினார். இனியும் அவரது வாசகர்கள் அநுபவித்த பாடுகள் அந்த அப்போஸ்தலரைக் கவலை கொள்ளச் செய்யவில்லை. சபைக்குழுமத்தில் நுழைந்து கிறிஸ்தவர்கள் சமீபத்தில்தான் ஆதாயப்படுத்திக் கொண்டிருந்த ஜீவனை அவர்களிடத்தில் இருந்து எடுத்துப்போடுவதாக அச்சுறுத்திய கள்ளப்போதகர்களைப் பற்றியே அவர் கவலை கொண்டிருந்தார். கிறிஸ்தவர்கள் சுதந்தரித்துக் கொண்டிருந்த மாபெரும் மற்றும் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை அவர்களுக்கு அவர் நினைவூட்டினார். அவர்கள் கிறிஸ்துவைப் பற்றிய அறிவில் தங்களைக் கனிநிறைந்தவர்களாக்கும் கிறிஸ்தவ கிருபைகளை அணிந்துகொள்வதன் மூலம் அறிவில் வளரும்படி அவர்களை அவர் அழைத்தார்.*

*பேதுருவின் அதிகாரத்துவம் அவரது அப்போஸ்தலத்துவத்தின் நெறிமுறையினால் வந்தது என்று இந்தக் கிறிஸ்தவர்கள் புரிந்து கொள்வது முக்கியமாக இருந்தது. அவரது சாட்சியத்திற்கும் கள்ளப்போதகர்கள் காட்சிக்குத் தாமதமாகவே வந்தனர் என்ற உண்மைக்கும் இடையில் மறைமுக மான நேர்மாறு ஒன்று நிலவிற்று. மேலும் பேதுரு, தமது செய்திக்கு ஆதரவாகத் தீர்க்கதரிசிகளை முன் மொழிந்தார்.*

*பேதுருவின் வார்த்தைகளில் இருந்து நாமும் கற்றுக்கொள்ள முடியும். கள்ளப்போதகர்கள் முதல் நூற்றாண்டுக்கு மாத்திரமே உரியவர்கள் அல்ல. ஒவ்வொரு தலைமுறையும் வேதவசனங்களை ஆராய்ந்து ஒவ்வொரு உபதேசத்தையும் பரிசீலனை செய்ய வேண்டும். இன்றைய நாட்களில் சபையானது, "தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும்'' நமக்குக் கொடுத்துள்ள கர்த்தரின் வசனத்தில் உள்ள நினைவூட்டுதல் அடிக்கடி தேவைப்படுகிறது (1:3).*